செ.வெ.எண்: 939/2017 நாள்: 08.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலின் தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் நடைபெற்று வரும் மறு சீரமைப்பு பணிகளை இன்று (08.12.2017) மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு முதன்மை செயலாளர்கள் அடங்கிய குழுவினர், மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் ஆய்வு- அச்சீரமைப்பு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலின் தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் இயல்புநிலை திரும்பும் வகையில் நடைபெற்று வரும் மறு சீரமைப்பு பணிகளை இன்று (08.12.2017) மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு முதன்மை செயலாளர்கள் அடங்கிய குழுவினர், மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் ஆய்வு செய்து, அச்சீரமைப்பு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சிக்குட்பட்ட திக்கிலான்விளை மற்றும் பொட்டல் பகுதியில் ஒகி புயலின் தாக்கத்தினால் மின்கம்பங்கள் மீது விழுந்த மரங்களை வெட்டி எடுக்கும் பணிகளும் சாய்ந்த மின்கம்பங்களை மறு சீரமைக்கும் பணிகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. அம்மறு சீரமைப்பு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், தகவல் தொழில்நுட்ப முதன்மை செயலாளருமான திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலரும், தொழில்துறை முதன்மை செயலாளருமான முனைவர் இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திருமதி ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் ஆகியோர் பார்வையிட்டு, அப்பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

அதனை தொடர்ந்து, ஒகி புயலின் தாக்கத்தினால் மின்கம்பங்கள் முற்றிலும் சேதமடைந்து மின்சார வசதி முற்றிலும் துண்டிக்கப்பட்டதால், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இலந்தையடிதட்டு பகுதியில் உள்ள குடிநீர் தொட்டிகளில் நீர் ஏற்றுவதற்கான சாத்திய கூறுகளின்றி அக்குடியிருப்பு வாசிகளுக்கு தேவையான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை இருந்து வந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே குடிநீர் தொட்டிகளுக்கு தேவையான தண்ணீர் மின்னாக்கி (ஜெனரேட்டர்)-யின் உதவியோடு குடிநீர் தொட்டிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு, பொதுமக்களுக்கு குடிநீர் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அவ்வகையில், இலந்தையடிதட்டு பகுதியில் ஓகி புயலின் தாக்கத்தினால் பயிரிடப்பட்ட பயிர்கள் மற்றும் தென்னை, வாழை உள்ளிட்ட பல்வேறு வேளாண் பயிர்களுக்கான தண்ணீரும், விவசாயத்திற்கு அடிப்படை தேவையாக விளங்கும் இத்தண்ணீரை கொண்டு செல்வதற்கான மின்சார வசதியின்றி தவிக்கும் விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மின்னாக்கி (ஜெனரேட்டர்) உதவியோடு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, அப்பயிர்கள் காப்பாற்றபட்டு வருவதையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு முதன்மை செயலாளர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மேலும், இலந்தையடிதட்டு பகுதியில் ஓகி புயலின் தாக்கத்தினால் பழுதடைந்த மின்கம்பங்களை சரிசெய்யும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ள மின் ஊழியர்கள் செய்து வரும் மின் இணைப்புக்கான பணிகளையும், நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட சரக்கல்விளை பகுதியில் பெய்த கனமழையின் காரணமாகவும், ஓகி புயலின் பெரும் தாக்கத்தினாலும் அப்பகுதியில் சுமார் 15 ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் முற்றிலும் முறிந்து விழுந்துள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் குறித்த விவரங்களையும் அப்பகுதியில் மேலும் பயிரிடபட்டிருந்த தென்னை உள்ளிட்ட பல்வேறு மரங்களின் சேதம் குறித்த விவரங்களையும், வேளாண்த்துறை சார்ந்த அலுவலர்களிடம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களும், அரசு முதன்மை செயலாளர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் கேட்டறிந்தனர். அதனை தொடர்ந்து, அப்பகுதியில் நடைபெற்று வரும் மறு சீரமைப்பு பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர்.

இந்நிகழ்வுகளில், வேளாண்மை கூடுதல் இயக்குநர் திரு. கனகராஜ், வேளாண்மை இணை இயக்குநர் திரு. பாண்டியன், தோட்டக்கலைத் துணை இயக்குநர் திரு. அசோக் மேக்ரின், இராஜாக்கமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி அனிதா, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் திருமதி கவிதா மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**